# திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான உப விதி

காலி மாநகர சபையின் நிர்வாக பிரதேசத்தில் உள்ள பொது இடங்கள், தனியார் இடங்கள், வீதிகள், பாதைகளில் உருவாகும் திண்ம கழிவுகளை வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்யும் இடங்களை செயற்படுத்துதல் மற்றும் இயக்குதல், பதப்படுத்துதல், தயார் செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான முறைமைப்படுத்தல், மேற்பார்வை, பரிசீலனை மற்றும் கட்டுப்படுத்துதலுக்கான உப விதி ஆகும்.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 267 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய மேற்சொன்ன கட்டளைச் சட்டத்தின் 129 ஆவது பிரிவு மற்றும் 272 ஆவது பிரிவின் 5 ஆவது உப பிரிவின் (ஆ) பந்தியில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான உப விதியை விதிப்பதற்கான அதிகாரம் மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ் உப விதி விதிக்கப்படுகிறது.

## பொது

**1.** இவ் உப விதி காலி மாநகர சபையின் திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான உப விதி என அழைக்கப்படும்.

**2.** காலி மாநகர சபையின் மாநகர எல்லைக்குள் பொது இடங்கள், தனியார் இடங்கள், வீதிகள், பாதைகளில் உருவாகும் திண்ம கழிவுகளை வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்யும் இடங்களை செயற்படுத்துதல் மற்றும் இயக்குதல், பதப்படுத்துதல், தயார் செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான முறைமைப்படுத்தல், மேற்பார்வை, பரிசீலனை மற்றும் கட்டுப்படுத்துவதற்காக இவ் உப விதி விதிக்கப்படுகிறது.

**3.** காலி மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவது வளாகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளாகத்தை கழிவுகள் இன்றி சுகாதாரமாகவும், அழகான நிலையிலும் வைத்திருக்க வேண்டும்.

**4.** காலி மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஏதாவது வளாகத்தின் ஒவ்வொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தமது வளாகத்தினுள் உருவாகும் கழிவுகளை சேகரித்தல், வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதலை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இவ் உப விதியின் ஏற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் அவ்வாறு செய்விக்க வேண்டும்.

**5.**

(i) வளாகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமது வளாகத்தில் உருவாகும் திண்ம கழிவுகள் ஒரு நபருக்கு அல்லது நபர்களுக்கு அல்லது சுற்றாடலுக்கு

சேதம் ஏற்படாத வகையில் காலி மாநகர சபையால் விதந்துரை செய்யப்படும் முறைமைக்கு ஏற்புடைய வகையில் இதில் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள முறையில் பொருத்தமான முறையை பாவித்து நாளாந்தம், இல்லையென்றால் அதனை விட குறைந்த காலப்பகுதியில் சேகரிக்க வேண்டும்.

**(ii)** ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் இவ் உப விதியின் முந்திய உப பிரிவுகளுக்கு அமைய சேகரிக்கப்படும் கழிவுகள் இலக்கம் 8 தொடக்கம் 20 வரையான உப விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடைய வகையில் வேறாக பிரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**(iii)** உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் கழிவுகள் களஞ்சியப்படுத்தல் அல்லது வெளியேற்றுவதற்காக பாவிக்கும் உக்கும் கழிவுப் பை, உறை, விசாலமான பாத்திரம் அல்லது வேறு உக்கும் கழிவு கொள்கலன் இலக்கம் 8 தொடக்கம் 20 வரையான உப விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடைய வகையில் சேகரிக்கப்படுவதற்காக நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். அவை கிழிந்து, துவாரம் ஏற்பட்டு, உடைந்து அல்லது தொடர்ச்சியாக ஈரலிப்பாக இருப்பதனால் மென்மை அல்லது வேறு ஏதாவது காரணிகளால் இயல்பாக பாவிக்கும் போது சுற்றாடலுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் உடைந்து விழும் அல்லது கிழிந்து போகும் நிலையில் இருந்தால் சேகரிப்பதற்காக பாவிக்கப்படலாகாது. உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எதிர்பார்த்தால் சபையால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்துக்கு அமைய பகுதியளவான நிவாரண ரீதியாக அல்லது முழுமையான நிவாரணமாக உக்கும் கழிவு கொள்கலன் சபையால் வழங்கப்படலாம்.

**(iv)** 5. (i) உப பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட காலி மாநகர சபையின் சபை அதிகார பிரதேசத்தில் அமுல்படுத்தப்படும் கழிவு சேகரிக்கும் முறை மற்றும் கால அட்டவணைக்கு ஏற்ப உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் அகற்றப்பட வேண்டும்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், வீட்டில் வசிப்பர்கள், விருந்தினர்கள் அல்லது அயலவர்களின் ஆரோக்கியம் அல்லது அப்பிரதேசத்தின் சுகாதார நிலைக்கு ஊறு ஏற்படுத்தும் அல்லது அபாயகரமான முறையில் உருவாவதற்கு இடமளித்தல், கழிவுகளை சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல் அல்லது வெளியேற்றலாகாது.

6.

(i) எந்தவொரு நபர், வீதி, பாதை, ஒழுங்கை, சிற்றொழுங்கை, நடைபாதைக்கு அல்லது வேறு பொது இடத்துக்கு அல்லது வளாகத்துக்கு அல்லது வடிகானுக்கு அல்லது நீர்ப் பாதைக்கு அல்லது நீர்த்தேக்கத்துக்கு அல்லது கடலுக்கு கழிவுகள் மற்றும் கசிவுகள் வெளியேற்லாகாது.

(ii) எந்தவொரு நபர் காலி மாநகர சபையின் பிரதேசத்தில் திறந்த நிலத்தில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுகளை எரித்தலாகாது.

(iii) ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7 ஆம் இலக்க உப விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய ஏதாவது கழிவு வகையை வெளியேற்றுதல், தயார் செய்தல் செய்தல், பதப்படுத்தல் அல்லது அகற்றுவதற்காக அனுமதி பெற வேண்டியுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு அனுமதி பெற தவறினால் அவர் அக்கழிவுகளை பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(iv) 7 ஆம் இலக்க உப விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய பதப்படுத்துதல், தயார் செய்தல் செய்தல் அல்லது வெளியேற்றக்கூடாத கழிவுகள் மேலே (7 iv) இன் ஏற்பாடுகளின் கீழ் ஏதாவது காலி மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரால் சேகரிக்கப்பட்ட ஏதாவது கழிவு வகைகள் இலக்கம் 8 தொடக்கம் 20 வரையான உப விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அகற்றப்பட வேண்டும்.

7.

(i) ஏதாவது வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழே காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக அன்றி கழிவுகளை குறித்த வளாகத்துக்குள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) காலி மாநகர சபையால் அவ்வாறான கழிவு அகற்றல் தடை செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில், அதாவது இவ் ஆவணத்தின் அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட பிரதேசம்.

(ஆ) காலி மாநகர சபையால் நிச்சயிக்கப்பட்டு விதிக்கப்பட்டுள்ள சில கழிவு வகைகள். (இவ் அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ள மருத்துவ கழிவுகள், பாவனையிலிருந்து அகற்றப்படும் மருந்துப் பொருட்கள், அகற்றப்படும் இலத்திரனியல் மற்றும் மின்னியல் போன்ற அபாயகரமான கழிவுகள் போன்ற பொருட்கள்)

(ii) வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதந்துரைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, காலி மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் தராதரத்துக்கு அமைய கட்டமைக்கப்பட்ட தகனம் செய்யுமிடம் அல்லது போறணையில் கழிவுகள் எரிக்கப்படலாம். இல்லாவிட்டால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதந்துரைகளுக்கு அமைய காலி மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கழிவு தயார் செய்தல் செய்தல், பதப்படுத்தல் அல்லது புதைக்கலாம்.

(iii) எவராவதொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ''கொம்போஸ்ற் கொள்கலன்'' பெறுவதற்காக ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்தால் குறித்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் குறித்த கொம்போஸ்ற் கொள்கலனை பராமரிப்பதற்கு போதுமான இடவசதி வளாகத்தில் இருந்தால் ஆணையாளர் குறித்த கொம்போஸ்ற் கொள்கலனுக்கான கிரயத்தின்

ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிவாரணமாக வழங்குதல் காலி மாநகர சபை அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் சாத்திய ஆய்வின் பின்னர் குறித்த கொம்போஸ்ற் கொள்கலன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு வழங்கப்படலாம். அவ்வாறு கொம்போஸ்ற் கொள்கலன் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உரியதாக ஏதாவது விஷேட நிலையின் கீழின்றி மாநகர ஆணையாளரின் முன் அங்கீகாரம் இன்றி குறித்த வளாகங்களில் வீட்டு கழிவுகள் காலி மாநகர சபையால் பொறுப்பேற்கப்படாது.

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வளாகத்தினுள் சேரும் "வீட்டுத்தோட்டக் கழிவுகள்" இயலுமானவரை ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் பதப்படுத்துதல் அல்லது தயார் செய்தல் செய்தல் வேண்டும். குறித்த உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் எஞ்சியிருக்கும் வீட்டுத்தோட்ட கழிவுகள் இருந்தால் அது அகற்றப்பட வேண்டிய கழிவுகளின் தன்மையை கருத்திலெடுத்து, அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையில் இதில் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் காலி மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

(v) வீதி அல்லது பாதைக்கு அருகிலுள்ள ஏதாவது மரம் அல்லது மரத்தின் ஒரு பகுதியை வெட்டும் யாராவது ஒரு நபர் உடனடியாக அதனை அகற்ற வேண்டும். இல்லாவிட்டால் அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். அதுவும் இல்லாவிட்டால் சபையால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுக்கு அமைய காலி மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

(vi) ஒவ்வொரு நபரும் தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதாவது விலங்கு வீதி, ஒழுங்கை அல்லது பொது இடத்தில் மலங்கழிப்பதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு மலங்கழித்தால் இலக்கம் 8 தொடக்கம் 24 வரையான உப விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அதனை சுத்தப்படுத்தி அகற்றுதல் குறித்த நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொரு நபரும் மாநகர சபை பிரதேசத்தில் எந்த வகையிலுமான கழிவை வாகனத்திலிருந்து வீதியில், பாதையில் அல்லது பொது இடத்தில் வெளியேற்றுதல் அல்லது அங்கே வைத்தலாகாது.

(viii) வீடு அல்லது வேறு ஏதாவது வளாகத்தின் கட்டுமானம் அல்லது திருத்தம் செய்வதற்கு விண்ணப்பிக்கும் யாராவது ஒருவர் தனது வளாகத்தில் கட்டுமானத்தின் போது அல்லது திருத்தும் போது உருவாகும் திண்மக் கழிவு மற்றும் வெளியேற்றப்படும் பொருட்கள், தயார் செய்தல் செய்யப்படும் மற்றும் தயாரிக்கப்படும் முறை தொடர்பான விபரங்கள் அவரது விண்ணப்ப படிவத்தில் உள்ளடக்க வேண்டும்.

(ix) அ) வீட்டு வளாகம் தவிர்ந்த ஏனைய அனைத்து வளாகங்களுக்காகவும் காலி மாநகர சபையால் பொறுப்பேற்கப்படும் கழிவுகளுக்காக (குறித்த கழிவுகளை உரிய வகையில் முகாமைத்துவம் செய்வதற்காக செலவாகும் கிரயத்துக்கு ஒப்பீடாக மற்றும் அகற்றப்படும் கழிவுகளின் நிறையின் அடிப்படையிலான) ஏதாவது அறவீடு அவ்வப்போது காலி மாநகர

சபையால் விதிக்கப்படுவதுடன், குறித்த பணத்தை செலுத்துதல் உரிய வளாகத்தில் குடியிருப்பவர்களின் பொறுப்பாகும்.

ஆ) வீட்டு வளாகத்திலிருந்து வெளியேற்றப்படும் உப விதியின் அட்டவணைண 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் வீட்டு கழிவுகள் வகையில் அடங்காத வீட்டு வளாகத்தில் உருவாகும் கழிவு வகைகளுக்காக மேலே காட்டப்பட்டுள்ள அடிப்படையில் அறவீடு விதிக்கப்படும் போது குறித்த பணத்தை செலுத்துதல் உரிய வளாகத்தில் குடியிருப்பவர்களின் பொறுப்பாகும்.

(x) காலி மாநகர சபையால் வீட்டு வளாகத்திலிருந்து உருவாகும் வீட்டு கழிவுகளுக்காக தொழில்நுட்ப அடிப்படையில் நிச்சயிக்கப்பட்ட நிறைக்கு உரியதாக இவ் அட்டவணை 5 இல் காட்டப்படும் வகையில் கழிவுகள் பொறுப்பேற்கப்படும். ஏதாவது காரணத்தினால் ஏதாவது வீட்டு வளாகத்திலிருந்து தொடர்ச்சியாக குறித்த ஆகக்கூடிய நிறையை விட கூடுதலான அளவு கழிவு உருவாகிறது என காலி மாநகர சபை அவதானிக்கும் போது குறித்த வளாகத்தில் குடியிருப்பவருக்கு காலி மாநகர சபையால் குறிப்பிடப்படும் அறவீடு விதிக்கப்படலாம். அவ்வாறு செலுத்துகை விதிக்கப்படும் போது, குறித்த வளாகத்தின் குடியிருப்பாளரால் குறித்த கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

## வீட்டு வளாகம்

8.

(i) அனைத்து உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் கூட்டுவதன் மூலம் அல்லது வேறு முறைகளில் உருவாகும் கழிவுகள் கீழே காட்டப்படும் வகையில் தெரிவுசெய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்,

(உ) மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களில் அடங்காக கழிவுகள்

(ii) மேற்குறித்த வகுதிகளில் சேராத கழிவுகள் உருவாக்கப்பட்டால், அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) அனைத்து உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களும் (i) பந்தியில் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபைக்கு அல்லது காலி மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம். உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளுடன் குறித்த கழிவுகளை காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் காலி மாநகர சபையால் ஒவ்வொரு கழிவு வகைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அவ்வாறான கழிவுகளுக்காக சபையால் வழங்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் வைக்க வேண்டும்.

9.

(i) வாடகைக் குடியிருப்பாளர்கள் பலபேர் வசிக்கும் அடுக்குமாடிக் கட்டிடத்தின் ஒவ்வொரு உரிமையாளர்களும், முகாமைத்துவ சபை அல்லது குடியிருப்பாளர்களும் தமது கழிவுகளை கீழே காட்டப்படும் வகையில் தெரிவுசெய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதாரக் கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்,

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளுக்குரியதல்லாத ஆபத்து விளைவிக்கக்கூடியதாக இருந்தால், அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபை வழங்கும் எழுத்துமூல ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு, தகவல்களை மாதாந்தம் மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவத்தை திட்டமிட்டு குறித்த மாடி கட்டிடத்தின் ஒவ்வொரு உரிமையாளரும், முகாமைத்துவ சபை அல்லது குடியிருப்பாளரும் மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும். குறித்த

வளாகத்தில் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் குறித்த திட்டத்தை பின்பற்றுவதாக உடன்படிக்கை செய்ய வேண்டும்.

(iv) (i) ஆவது பந்தியில் நிச்சயித்து குறிப்பிடப்பட்டுள்ள கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்கள் மற்றும் விபரக் குறிப்புகளுக்கு அமைய நான்கு வகை கொள்கலன்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அவை தூய்மையாகவும், சுகாதாரமான நிலையிலும் பராமரிக்கப்பட வேண்டும்.

(v) (i) ஆவது உப பிரிவில் நிச்சயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் (ii) ஆவது உபபிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருக்க தவறும் சந்தர்ப்பத்தில் ஆணையாளரால் அறிவிக்கப்படும் நாளில் அல்லது அதற்கு முன்னர் குறித்த பாத்திரம் அல்லது கொள்கலனை வழங்குமாறு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம் ஆணையாளருக்கு உள்ளது. ஆணையாளரின் உத்தரவுக்கு அமைய செயற்படுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் கடமையாகும்.

(vi) கட்டிடத்தின் தரை அல்லது மாடியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தெரிவுசெய்து வேறு பிரித்த கழிவுகள் அதற்காக வைக்கப்பட்டுள்ள குறித்த பாத்திரம் அல்லது கொள்கலனில் இடப்பட வேண்டும்.

(vii) இவ் உப விதியின் i ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை அகற்றுவதற்கு அதிகாரம் பெற்ற ஒரு சேகரிப்பாளரின் கடமையாகும். அவ்வாறு அகற்றப்படாத ஏதாவது கழிவு (இ) மற்றும் (ஈ) விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளும் மாநகர கழிவு சேகரிப்பாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

## குறைந்த வசதிகள் கொண்ட வீடுகள்

**10.**

(i) சபையின் முன் அங்கீகாரம் பெற்ற குறைந்த வசதிகள் உள்ள வீட்டு உரிமையாளர்களின் பாவனைக்காக ஆணையாளரால் கழிவு பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களை இலவசமாக வழங்குதல் சட்டரீதியானது என்பதுடன் உரிய வகையில் கழிவு அகற்றல் இடம்பெறும் முறை தொடர்பாக காலி மாநகர சபை மேற்பார்வை செய்யும்.

(ii) ஒவ்வொரு குறைந்த வசதியுடைய வீட்டுக்கும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தனது வதிவிடத்தில் சேரும் கழிவுகள் கிழே காட்டப்படும் வகையில் தெரிவுசெய்து வேறுபடுத்தி தமது குடியிருப்புக்கு அருகிலுள்ள பொது இடங்களுக்கு வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் இட வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்,

(iii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iv) இவ் உப விதியின் (ii) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை அகற்றுவதற்கு பதிவுசெய்த ஒரு சேகரிப்பாளருக்கு அனுமதி வழங்குவதற்கான அதிகாரம் ஆணையாளருக்கு உள்ளது.

## கடைகள் மற்றும் அலுவலகங்கள்

11.

(i) காலி மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கடையின், அலுவலகத்தின் அல்லது அலுவலக / கடைத் தொகுதியில் சேரும் கழிவுகள் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறுபடுத்த வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்,

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு,

தகவல்களை மாதாந்தம் காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும், அல்லது குடியிருப்பாளரும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) உரிய கடை அல்லது அலுவலகத்தினால் உரிய கடை அல்லது அலுவலகத்தின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய அலுவலருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய கடை அல்லது அலுவலக பிரதானியின் பொறுப்பாகும்.

(v) தெரிவுசெய்து பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனியாக பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் போட்டு பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும்.

(vi) கடை அல்லது அலுவலக ஒவ்வொரு உரிமையாளரும், அல்லது குடியிருப்பாளரும் இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையின் அதிகாரம் பெற்ற கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம்.

(vii) தனி மாடி அல்லது பல மாடிகளைக் கொண்ட கடை அல்லது அலுவலக ஒவ்வொரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களுக்கு அமைவாக குறித்த கடை அல்லது அலுவலகத்தால் தெரிவுசெய்து பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல் அல்லது வைப்பதற்காக ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்துக்காக கழிவு பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் தேவையான எண்ணிக்கையில் வழங்கப்பட வேண்டும்.

(viii) இவ் உப விதியின் (v) ஆவது உபபிரிவில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கடை அல்லது அலுவலகத்தின் யாராவது ஒரு உரிமையாளர் தெரிவுசெய்து பிரிக்கப்பட்ட கழிவுகளை தனித்தனியாக பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் போட வேண்டும். இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையின் அதிகாரம் பெற்ற கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைப்பதற்கு ஒவ்வொரு உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளருக்கும் இயலுமை உள்ளது.

(ix) காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரால் சேகரிக்கப்படாத இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகள் மற்றும் (ii) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை ஆணையாளருக்கு செலுத்துவதன் அடிப்படையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் காலி மாநகர சபைக்கு ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் காலி மாநகர சபையின் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(x) அயலவர்கள் அல்லது குறித்த கடை அல்லது அலுவலகத்தில் சேவையில் ஈடுபடும் நபர்களுக்கு ஏதாவது ஆரோக்கிய அல்லது சுகாதார பிரச்சினை ஏற்படாதிருப்பதற்காக கழிவுகளை அகற்றுவதும் இவ் உப விதியில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை பாத்திரம் அல்லது கொள்கலனை பராமரிப்பதும் கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரினதும் பொறுப்பாகும்.

**ஹோட்டல்**

12.

(i) காலி மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு ஹோட்டல் உரிமையாளர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபர் தமது வளாகத்தில் சேரும் கழிவுகள் பின்வரும் வகையில் தெரிவுசெய்து வேறுபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவரால் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு, தகவல்களை மாதாந்தம் காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய ஹோட்டல் உரிமையாளரும் மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) உரிய ஹோட்டல் உரிமையாளரால் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய ஹோட்டல் உரிமையாளரின் பொறுப்பாகும்.

(v) ஒவ்வொரு ஹோட்டல் உரிமையாளரும் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் யாராவது நபர் தெரிவுசெய்து பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனியாக பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களில் போட்டு பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும்.

(vi) அனைத்து ஹோட்டல் உரிமையாளர்கள் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் யாராவது நபர் கொசுக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் நுழைவதனை தடுத்து, அனைத்து உணவுப் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் உக்கக்கூடிய கழிவுகள், பிளாஸ்ரிக் அல்லது உலோக பதார்த்ததால் தயாரிக்கப்பட்ட மற்றும் மூடி பாவிக்கப்படும் உரிய வகையில் பாதுகாக்கப்பட்ட பாத்திரம் அலல்து வேறு கொள்கலனில் வைக்கப்பட வேண்டும்.

(vii) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம். ஆணையாளருக்கு உள்ளது.

(viii) இவ் உப விதியின் (v) ஆவது உபபிரிவின் கீழ் ஒப்படைக்கப்படாத அவ்வாறான கழிவு மற்றும் (i) ஆவது உபபிரிவின் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகள் கழிவு வகைகளின் தன்மையை கருத்திலெடுத்து சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் ஆணையாளருக்கு செலுத்துவதன் அடிப்படையில் காலி மாநகர சபையின் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ix) இவ் உப விதியின் கருமங்களுக்கான பதங்களின் தொடர்புகளுக்கு அமைய வேறு அரத்தம் தேவையென்றால் தவிர, ஹோட்டல் என்பது நித்திரை செய்யும் வசதியுடன் அல்லது இன்றி பணம் செலுத்துவதன் அடிப்படையில் நுகர்வுக்காக உணவு பானங்கள் மற்றும் / அல்லது மதுசாரம் வழங்கப்படும் இடம் என கருதப்படும். அதில் உணவுச் சாலை, விருந்தினர் இல்லம், விடுதி, வாடிவீடு, யாத்திரீகர்களுக்கான ஓய்வு மண்டபம், சோற்றுக் கடை அல்லது ஹோட்டலுக்கு சமமான வகையிலான வியாபாரத்தை நடத்தும் ஏதாவது வேறு வளாகமும் உள்ளடங்கும்.

## மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலையம்

13.

(i) ஒவ்வொரு மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலையங்களும் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருக்கும் நபர் வளாகத்தில் சேரும் கழிவுகள் மற்றும் கீழே காட்டப்படும் வகையில் தெரிவுசெய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவரால் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு, தகவல்களை மாதாந்தம் காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலையங்களின் உரிமையாளரும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) உரிய அனைத்து மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலைய உரிமையாளர்களும் உரிய விற்பனை நிலையத்தின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலைய உரிமையாளரின் பொறுப்பாகும்.

(v) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை ஈரம் கசியாத பிளாஸ்ரிக் அல்லது உலோக பதார்த்ததால் தயாரிக்கப்பட்ட கொள்கலனில் வைக்க வேண்டும் என்பதுடன், அதனுள் கொசுக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது ஏதாவது ஏனைய விலங்குகள் நுழைவதனை தடுத்து, உரிய வகையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான ஏதாவது பாத்திரம் அல்லது வேறு கொள்கலனில் வைக்கப்பட வேண்டும்.

(x) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையில் அதிகாரம் பெற்ற கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவு இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (இ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளும் காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை ஆணையாளருக்கு செலுத்துவதன் அடிப்படையில் காலி மாநகர சபையின் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## விலங்கறுமனை, இறைச்சி, மீன், கோழி இறைச்சி மற்றும் முட்டை விற்பனை கூடம்

14.

(1) குறித்த கருமத்துக்காக காலி மாநகர சபையின் நகர சபைத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபரால் வழங்கப்படும் உரிமத்துக்கு அமைய அதில் குறிப்பிடப்பட்ட இடத்தில் எந்தவொரு நபரும் விலங்கறுமனை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி பெற்ற விலங்குகள் அல்லது பறவைகள் தவிர வேறு எந்தவொரு விலங்கு அல்லது பறவையை கொலை செய்யலாகாது.

(ii) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்படும் அனைத்து உரிமங்களும் கொலை செய்யப்படக்கூடிய விலங்கின் அல்லது பறவையின் வகை, கொள்கலம் நிர்மாணிக்கப்பட வேண்டிய முறை, தூய்மைப்படுத்தல் மற்றும் மனித நுகர்வுக்கு எடுக்காத குருதி, குடல் மற்றும் ஏனைய பகுதிகளை அகற்றுவதற்குரிய நிபந்தனைகள் மற்றும் காலி மாநகர சபை பொருத்தமானது என நினைக்கும் வேறு நிபந்தனைகள் விஷேடமாக குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) இவ் உப விதியின் 14 (i) ஆவது உபபிரிவின் கீழ் உரிமம் வழங்கப்படுவதற்காக அவ்வப்போது சபையால் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணம் காலி மாநகர சபையின் ஆணையாளரால் அறவிடப்படுவதுடன், குறித்த கட்டணம் உரிமம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(iv) இறைச்சி, கோழி இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது குறித்த வியாபாரத்தை மேற்கொள்பவர் தமது கழிவுகளை பின்வரும் முறையில் தெரிவுசெய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(v) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(vi) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல்

தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு, தகவல்களை மாதாந்தம் காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய இறைச்சி, கோழி இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை நிலையங்களின் உரிமையாளரும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(vii) இறைச்சி, கோழி இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது குறித்த வியாபாரத்தை மேற்கொள்பவரால் குறித்த வியாபார நிலையத்தின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய அலுவலருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து இறைச்சி, கோழி இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடத்தின் உரிமையாளர் அல்லது குறித்த வியாபாரத்தை மேற்கொள்பவரின் பொறுப்பாகும்.

(viii) தெரிவு செய்யப்பட்ட கழிவுகள் தனியான பாத்திரம் அல்லது கொள்கலனில் வைக்கப்பட வேண்டும். இவ் உப விதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை ஈரம் கசியாத கொள்கலனில் வைக்க வேண்டும் என்பதுடன், குறித்த கொள்கலனுக்குள் கொசுக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது ஏதாவது ஏனைய விலங்குகள் நுழைவதனை தடுத்து, உரிய வகையில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

(ix) இவ் உப விதியின் (iv) ஆவது உபபிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவு இவ் உப விதியின் (iv) ஆவது உபபிரிவின் (இ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளுடன் காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் துர்நாற்றம் பரவ முன்னர் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## நடமாடும் மற்றும் நடைபாதை வியாபாரம்

15.

(i) காலி மாநகர சபையால் விசேட விழாக்கள் மற்றும் வேறு சந்தர்ப்பங்களின் போது அனுமதி வழங்கப்படும் கழிவுகள் உருவாகும் வியாபாரத்தை மேற்கொள்ளும் நடமாடும் மற்றும் நடைபாதை வியாபாரிகளுக்கு காலி மாநகர சபையின் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் தராதரங்களுக்கு அமைவாக குறித்த கழிவுகளை போடுவதற்கான பாத்திரம் அல்லது

கொள்கலன் வைக்கப்பட வேண்டும். அவ்வாறான எந்தவொரு கழிவும் நடை பாதையில், வீதியில் அல்லது பொது இடத்தில் போடப்படலாகாது.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட நடைபாதை வியாபார வாகனங்கள் அல்லது பாதசாரிகளின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பாத்திரங்களை அல்லது வேறு கொள்கலனை வைத்தலாகாது.

(iii) அனைத்து நடமாடும் மற்றும் நடைபாதை வியாபாரிகளும் தனது வியாபாரம் காரணமாக உருவாகும் கழிவுகள் பின்வரும் முறையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(iv) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவரால் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(v) தெரிவு செய்யப்பட்ட கழிவுகள் தனியான பாத்திரம் அல்லது கொள்கலனில் வைக்கப்பட வேண்டும். இவ் உப விதியின் (iii) ஆவது உபபிரிவின் (அ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள பூச்சிகள், எலிகள் அல்லது விலங்குகள் கடிக்கக்கூடிய கழிவுகளை பாதுகாப்பான கொள்கலனில் வைக்க வேண்டும் என்பதுடன், மேலதிக கழிவுகளை போட வேண்டிய தேவை ஏற்பட்டாலன்றி அதனை மூடி வைக்க வேண்டும்.

(vi) அனைத்து நடமாடும் மற்றும் நடைபாதை வியாபாரிகளும் இவ் உப விதியின் (iii) ஆவது உபபிரிவின் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் அல்லது இவ் உப விதியின் (iii) ஆவது உபபிரிவின் (இ) விடயத்தில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளுடன் காலி மாநகர சபையால் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். வியாபாரம் மேற்கொள்ளப்படாத சந்தரப்பங்களில் கழிவு பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் நடைபாதையில், வீதியோரத்தில் அல்லது நெடுஞ்சாலையில் வைக்கப்படலாகாது. அவ்வாறு இல்லையெனின் வியாபார செயற்பாடுகளின் இறுதியில் நாளாந்தம் உரிய வகையில் காலி மாநகர சபையால் விதந்துரைக்கப்படும் முறையில் உரிய இடத்தில் கழிவுகள் அகற்றப்பட வேண்டும்.

(vii) அனைத்து நடைபாதை வியாபாரிகளும் கழிவு பாத்திரங்கள் மற்றும் கொள்கலன் காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க முன்னர் சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை செலுத்த வேண்டும்.

## தொழிற்சாலைகள்

16.

(i) காலி மாநகர சபை எல்லைக்குள் அனைத்து தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களும் தொழிற்சாலை வளாகத்தில் உருவாகும் கழிவுகளை ஒன்றுசேர்த்து பின்வரும் வகையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவரால் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல், உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவு, தகவல்களை மாதாந்தம் காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களாலும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள், உரிமையாளரின் பொறுப்பாகும்.

(v) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை காலி மாநகர சபையில்

பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படாத ஏதாவது கழிவு காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை ஆணையாளரிடம் செலுத்துவதன் அடிப்படையில் காலி மாநகர சபையின் அதிகாரம் பெற்ற மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(vi) 1980 ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வியாபாரத்துக்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அபாயகரமான கழிவுகள் அகற்றப்பட வேண்டும்.

## அகழ்வு, கட்டுமானம் மற்றும் தகர்த்தல்

17.

(i) காலி மாநகர சபையின் எல்லைக்குள் ஏதாவது வீதி, பாதை அல்லது பொது இடம் அகழ்வு செய்யப்பட்டு அல்லது தனியார் ஆதனத்தில் அகழ்வு செய்து கட்டுமானம் அல்லது தகர்க்கும் அனைத்து நபர்களும் அதன்மூலம் உருவாகும் கழிவுகளை காலி மாநகர சபையால் விதந்துரை செய்யப்படும் பொருத்தமான முறையில் குறித்த வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

(ii) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை காலி மாநகர சபை ஆணையாளரிடம் செலுத்துவதன் அடிப்படையில் காலி மாநகர சபையின் கட்டுமானக் கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு (கோவேம் நிலையம்) அல்லது காலி மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(iii) கேஸ், மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது ஏனைய பொது வசதிகளை வழங்குவதற்காக ஏதாவது வீதி, பாதை அல்லது பொது இடத்தில் அகழ்வு காரணமாக ஏதாவது கட்டுமானம் அல்லது தகர்ப்பு செயன்முறை அல்லது தனியார் வளாக அகழ்வு காரணமாக ஏதாவது கட்டுமானம் அல்லது தகர்ப்பு செயன்முறை உருவாக்கும் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக எவராவது ஒருவர் காலி மாநகர சபை ஆணையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

(iv) மேலே குறிப்பிடப்பட்ட உப பிரிவின் கீழ் அங்கீகாரம் வழங்க முன்னர் காலி மாநகர சபையின் ஆணையாளரால் 8 ஆவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட மாதிரிக்கு அமைய உரிய அலுவலகத்தில் உருவாகக்கூடிய கழிவு வகைகள் (மீள பாவிக்கக்கூடிய, மீள் சுழற்சி செய்யக்கூடிய அபாயகரமான இலத்திரனியல் பொருட்கள் மற்றும் அகற்றப்படும் மருந்துகள் போன்ற) மேற்குறித்த வகுதிகளில் சேராத வேறு கழிவுகள் உருவாகும் அளவு தொடர்பாக கழிவுகளை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்காக விண்ணப்பதாரியால் பாவிக்கப்பட்டுள்ள செயன்முறை, உத்தேச கருமம் நிறைவடைந்த பின்னர் வீதி அல்லது பொது இடத்தில் தற்காலிகமாக வைக்க வேண்டியவரும் கழிவின் அளவு மற்றும் விண்ணப்பதாரி குறித்த கழிவுகளை அகற்ற தாமதித்தால் அதனை அகற்றுவதற்கு தேவையான கிரயத்தையும் கருத்திலெடுக்க வேண்டும்.

அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரி மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துக்கு சமமான பணத்தை வைப்பாக செலுத்த வேண்டும்.

(v) ஒரு நபர் முழு கழிவையும் அல்லது அதன் ஒரு பகுதியை அகற்ற தவறினால் அல்லது அகற்ற தாமதித்தால் காலி மாநகர சபையின் ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் முறையில் மேலே சொல்லப்பட்ட கழிவுகளை அகற்றப்படும் என்பதுடன், அதன் விளைவாக செய்ய வேண்டிவரும் செலவு (ii) ஆவது உப பிரிவின் கீழ் வைப்பு செய்யப்படும் பணத்துக்கு ஈடு செய்யப்படும். இல்லாவிட்டால் விண்ணப்பதாரியால் அனுமதி பெறும் போது சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியை தாண்டிச் சென்று ஆறு வாரத்தினுள் கழிவுகளின் முழுத் தொகையையும் அகற்றுதல் நிறைவடையவில்லை எனின், வைப்பு செய்யப்பட்ட பணம் அதற்காக ஈடு செய்யப்படும்.

## மருத்துவமனைகள்

19.

(i) மருத்துவமனை உரிமையாளர் வளாகத்தில் உருவாகும் கழிவுகளை பின்வரும் வகையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல் மற்றும் உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவுகளை காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய அனைத்து மருத்துவமனை உரிமையாளரும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) அனைத்து மருத்துவமனை உரிமையாளர்களும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு

முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள், உரிமையாளரின் பொறுப்பாகும்.

(v) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை தனியாக கொள்கலனில் வைத்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும். (i) ஆவது உபபிரிவின் (இ), மற்றும் (ஈ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை அதற்காக விஷேடமாக தயாரிக்கப்பட்ட பாத்திரம் அல்லது கொள்கலனில் வைக்க வேண்டும் என்பதுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும். 1980 ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வியாபாரத்துக்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அபாயகரமான கழிவுகள் அகற்றப்பட வேண்டும்.

(vi) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை அதிகாரம் பெற்ற கழிவு சேகரிப்பாளரிடம் அல்லது சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## மலர்ச்சாலைகள், அந்தியகால சேவை மண்டபங்கள்

20.

(i) மலர்ச்சாலைகள், அந்தியகால சேவை மண்டப உரிமையாளர் வளாகத்தில் உருவாகும் கழிவுகளை பின்வரும் வகையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவரால் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

(iii) கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல் மற்றும் உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவுகளை காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய அனைத்து மலர்ச்சாலை, இறுதி நிகழ்வு மண்டபம் உரிமையாளரும் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

(iv) மலர்ச்சாலை, இறுதி நிகழ்வு மண்டப உரிமையாளரும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து மலர்ச்சாலை, இறுதி நிகழ்வு மண்டப உரிமையாளரின் பொறுப்பாகும்.

(v) இவ் உப விதியின் (i) ஆவது உபபிரிவின் கீழ் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை தனியாக கொள்கலனில் வைத்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும். (i) ஆவது உபபிரிவின் (இ), மற்றும் (ஈ) விடயங்களில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை அதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட பாத்திரம் அல்லது கொள்கலனில் வைக்க வேண்டும் என்பதுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும். 1980 ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்த வியாபாரத்துக்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அபாயகரமான கழிவுகள் அகற்றப்பட வேண்டும்.

(vi)(i) ஆவது உபபிரிவின் (அ), மற்றும் (ஆ) விடயங்களில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவு வகைகளை பதிவுசெய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் அல்லது சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணத்தை செலுத்துவதன் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## கழிவு சேகரிப்பாளர்கள்

21.

(i) காலி மாநகர சபை எல்லைக்குள் அனைத்து வகையான கழிவு சேகரிப்பாளரகள், கழிவுகளை கொண்டு செல்வோர், கழிவு மீள்சுழற்சி செய்வோர் மற்றும் முன் பதப்படுத்தல் செய்வோருக்கு மாநகர சபையிடம் வருடாந்த உரிமத்தை பெற்று பதிவுசெய்ய வேண்டும்.

(ii) இவ் உப விதியின் 9 ஆவது அட்டவணையில் காட்டப்படும் வகையிலான மாதிரியிலான விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்த பின்னர் காலி மாநகர சபை எல்லைக்குள் உரிமத்தில் காட்டப்படும் கருமத்தை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், அவரது

கருமங்கள் காலி மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரால் மேற்பார்வை செய்யப்படும்.

(iii) குறித்த உரிமத்தை பெற எதிர்பார்க்கும் நபர் தனது விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் போது தனது செயன்முறையில் சேகரிக்க எதிர்பார்க்கும் கழிவு வகைகள், கழிவுகளின் அளவு, கழிவுகளை கொண்டு செல்லுதல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல், மீள்சுழற்சி செய்தல் அல்லது / மற்றும் பதப்படுத்தல் செய்யும் முறை, இடம் குறித்த செயன்முறையில் உருவாகவுள்ள கழிவுகளை குறைக்கும் முறைமை தொடர்பான முறைகளுடன் கழிவு முகாமைத்துவ திட்டத்தை காலி மாநகர சபையிடம் சமர்ப்பிப்ப வேண்டும். குறித்த கழிவு முகாமைத்துவ திட்டத்தை ஆராய்ந்து பார்த்து காலி மாநகர சபை ஆணையாளரால் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ திட்டம் அங்கீகரிக்கப்படும்.

(iv) (i) ஆவது உபபிரிவில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மாநகர சபை எல்லைக்குள் நடமாடும் அல்லது முறைசாரா கழிவு சேகரிப்பாளர்கள், கழிவு கொண்டு செல்வோர், கழிவு சேகரிப்போர், கழிவு மீள்சுழற்சி செய்வோர் அனுமதி பெறும் போது காலி மாநகர சபையிடமிருந்து அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்பதுடன், அதற்காக மாநகர சபையால் விதிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக மாதாந்தம் கையாள எதிர்பார்க்கும் கழிவுப்பொருளின் அளவுக்கு ஒப்பீடாக பண வைப்பு செய்ய உத்தரவிடப்படும். குறித்த பணவைப்பு குறித்த இடத்தில் கழிவுகள் உரிய வகையில் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதாக காலி மாநகர சபையின் மாநகர ஆணையாளர் திருப்தியடைந்த பின்னர், குறித்த உரிமத்தின் காலப்பகுதி கடந்த பின்னர் குறித்த பணம் உரிமம் பெற்றவருக்கு விடுவிக்கப்படும்.

(v) குறித்த உரிமம் பெற்றவர் தனது கருமங்களின் போது உரிமத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள், வழிகாட்டல்கள் மற்றும் காலி மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ திட்ட நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டல்களை மீறுதல் தவறாகும் என்பதுடன், குறித்த பிரதேசத்தில் உரிமத்தை இரத்துச் செய்தல் மற்றும் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்னர் தண்டணையாக அபராதம் விதிக்கப்படும்.

## நாளாந்தம் வருகை தரும் மக்கள்

22.

i. காலி மாநகர சபை எல்லைக்குள் நாளாந்தம் பல்வேறு சேவைகள், கருமங்களுக்காக வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்கள் நாளாந்தம் வருகைதரும் மக்கள் என அடையாளம் காணப்படுகின்றனர்.

ii. இவ்வாறு வருகைதரும் நாளாந்தம் வருகைதரும் மக்கள் தமது நாளாந்த கருமங்களின் போது உருவாகும் கழிவுகளை மட்டும் காலி மாநகர சபையால் கழிவு சேகரிப்பதற்காக உரிய இடத்தில் கழிவு முகாமைத்துவம் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இடங்களில் கழிவுகளை அகற்றுவதற்காக வைக்கப்பட்டள்ள பாத்திரங்களில் உரிய வழிகாட்டல் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய கழிவுகளை அகற்ற வேண்டும். நாளாந்தம் வருகைதரும் மக்களால் அவ்வாறு கழிவுகள் அகற்றப்படும் போது வெளியிலிருந்து கொண்டுவரும் கழிவுகளை குறித்த இடங்களில் அகற்றுதல் தவறாகும் என்பதுடன், மாநகர ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரால் குறித்த செயன்முறை மேற்பார்வை செய்யப்படுவதுடன், குறித்த நிபந்தனைகளை மீறும் நபர்களுக்கு மாநகர கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள்

23.

i. காலி மாநகர சபை எல்லைக்குள் பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கின் உரிமையாளர், முகாமைத்துவ சபை, அதிபர் குறித்த வளாகங்களில் உருவாகின்ற கழிவுகளை பின்வரும் வகையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

ii. மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

iii. கழிவு உருவாதலை குறைத்தல் மற்றும் மேலே குறிப்பிட்ட வகையில் வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பாக தொடராய்வு செய்தல் மற்றும் உருவாகும் கழிவுகளின் அளவு தொடர்பான தரவுகளை காலி மாநகர சபைக்கு வழங்குதல் போன்ற கழிவு முகாமைத்துவ திட்டதுக்கு உரிய அனைத்து பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கின் உரிமைளர், முகாமையாளர் சபை, அதிபர் காலி மாநகர சபையுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

iv. பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கின் உரிமையாளர், முகாமையாளர் சபை, அதிபரால் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு வகிக்கும் ஊழியரை பெயர் குறிப்பிட்டு காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் உரிய ஊழியருக்கு தேவையான வசதிகளை வழங்குதல் உரிய அனைத்து பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கின் உரிமையாளர், முகாமையாளர் சபை, அதிபரின் பொறுப்பாகும்.

v. காலி மாநகர சபையால் வேண்டுகோள் விடுக்கப்படும் போது குறித்த அதிகார தரப்பினரின் அனுமதியுடன் மாநகர சபையால் நடத்தப்படும் கழிவு முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை, விரிவுரை மற்றும் கருத்தரங்குகளில் குறித்த பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் மற்றும் தொடர்புடைய ஊழியர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் கழிவு முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை, விரிவுரை மற்றும் கருத்தரங்குகளுக்கு தேவையான வசதிகளை வழங்குதல் குறித்த அனைத்து பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கின் உரிமையாளர், முகாமையாளர் சபை, அதிபரின் பொறுப்பாகும்.

vi. பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் - மேலே குறிப்பிடப்பட்ட முறைகளுக்கு முரணாக கழிவு அகற்றுதல் தவறாகும் என்பதுடன் தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர், முகாமைத்துவ சபை, அதிபருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் குற்றவாளியாக்கப்பட்டு பின்னர் அபராதம் விதிக்கப்படலாம்.

## ஏனைய வளாகங்கள்

24.

i. இலக்கம் 8 தொடக்கம் 19 வரையான உப விதிகளில் விசேடமாக குறிப்பிடப்படாத வியாபாரத்தை காலி மாநகர சபை எல்லைக்குள் மேற்கொள்ளும் நபர் அல்லது பொது மக்களின் பங்கேற்புடன் பொதுவான சமய, சமூக கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள் அல்லது கல்வி செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் மற்றும் அமுல்படுத்தும் யாராவது நபர் குறித்த நிகழ்வை ஒழுங்குபடுத்த முன்னர் மாநகர சபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். மேலே சொல்லப்பட்ட செயற்பாடுகளால் உருவாகும் பின்வரும் வகையில் தெரிவு செய்து பிரிக்க வேண்டும்.

(அ) உணவு கழிவுகள் மற்றும் வேறு உயிரியல் ரீதியில் உக்கும் கழிவுகள். (இதன் 7 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஆ) மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்.

(இ) அபாயகரமான கழிவுகள் (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள், சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற இதன் 6 ஆவது அட்டவணையில் காட்டப்படும் கழிவுகள்)

(ஈ) விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள் மற்றும் மலம்.

ii. மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளில் அடங்காத கழிவுகள் உருவானால் அது தொடர்பாக குறித்த கழிவை உருவாக்குபவர் காலி மாநகர சபையிடம் எழுத்துமூல ஆலோசனை பெற்று, காலி மாநகர சபையால் வழங்கப்படும் எழுத்துமூல ஆலோசனைக்கு அமைய செயற்பட வேண்டும்.

iii. (i) ஆவது உப பிரிவில் விசேடமாக குறிப்பிடப்பட்ட ஏதாவது செயற்பாட்டுக்காக அனுமதி பெற்றவர் குறித்த செயற்பாட்டினால் உருவாகும் கழிவுகளை குறைப்பதற்காக முன்மொழியும் முறைமை மற்றும் (i) ஆவது உப பிரிவில் உள்ள முறையில் கழிவுகளை சேகரித்தல், வேறு பிரித்தல் மற்றும் வெளியேற்றுதல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் தொடர்பாகவும் அது அமுல்படுத்தப்படும் முறை தொடர்பாக மற்றும் குறித்த செயற்பாட்டின் மூலம் உருவாகலாம் என கருதி மதிப்பீடு செய்யப்படும் கழிவுகளின் அளவு தொடர்பான விபரமான திட்டத்தை அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கும் விண்ணப்பத்துடன், குறித்த உப விதியின் 10 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் காலி மாநகர சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

iv. (i) ஆவது உப பிரிவில் விஷேடமாக குறிப்பிடப்பட்ட ஏதாவது செயற்பாடு செய்யும் ஒருவர் குறித்த செயற்பாட்டை நடத்துவதற்கு அனுமதி பெறும் போது காலி மாநகர சபையில் அனுமதி பெற வேண்டும் என்பதுடன், அதற்காக அனுமதி வழங்கும் போது காலி மாநகர சபையால் இரண்டு பண வைப்புகள் பொறுப்பேற்கப்படும். முதலாவது வைப்பு குறித்த செயற்பாட்டின் இறுதியில் குறித்த செயற்பாட்டினால் உருவாகும் கழிவுகளை சேகரித்தல், வேறுபிரித்தல் மற்றும் வெளியேற்றுதல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்துதல் தொடர்பாக திருப்தியடைந்த பின்னர் குறித்த உரிமம் பெற்றவருக்கு விடுவிக்கப்படும்.

v. இரண்டாவது வைப்பு குறித்த செயற்பாட்டின் இறுதியில் குறித்த செயற்பாட்டினால் உருவாகும் என கருதும் கழிவுகளின் அளவுக்கு ஏற்ப அறவிடப்படும். அது 11 அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் அறவிடப்படும். குறித்த செயற்பாட்டின் இறுதியில் குறித்த இடத்தில் உருவாகும் கழிவுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட கழிவுகளின் அளவுக்கு ஏற்தாக இருந்தால் அதனை உரிய வகையில் அகற்றுவதற்காக மாநகர சபையால் பொறுப்பேற்கப்படும் போது அதற்கு ஈடாகும் கட்டணமாக அறவிடப்படும். ஏதாவது காரணத்தினால் குறித்த செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட கழிவுகளின் அளவை விடவும் 5% கூடுதலாக இருந்தால் அட்டவணைக்கு அமைய வைப்பு செய்யப்பட்ட பணம் வைப்புக்குரிய 25% மிகைக் கட்டணத்தை உரிமம் பெற்றவர் மாநகர சபைக்கு செலுத்த வேண்டும். கழிவுகளை காலி மாநகர சபையிடம் ஒப்படைக்கும் போது 11 ஆவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் கலப்பு கழிவுக்காகவும், வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளுக்காக அறவிடப்படும் கட்டணம் மாற்றமடையும்.

vi. (i) ஆவது உப பிரிவின் கீழ் காட்டப்படும் செயற்பாட்டுக்காக காலி மாநகர சபையில் உரிமம் பெற்ற நபர் குறித்த செயற்பாட்டின் இறுதியில் உருவாகும் கழிவுகள் (i) ஆவது உப பிரிவில் காட்டப்படும் வகையில் வேறு பிரிக்கப்பட்டு, கழிவுகள் அகற்றப்படும் வரை தனியான கொள்கலனில் பொதி செய்து பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும்.

**கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிலையத்தை நிறுவுதல்.**

i. இவ் உப விதியின் குறிக்கோளை அடையும் நோக்கத்துக்காக காலி மாநகர சபையால் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிலையம் என அழைக்கப்படும் நிறுவனத்தை நிறுவலாம்.

ii. இவ் உப விதிக்கு அமைய நிறுவப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிலையத்தின் அதிகாரம் மற்றும் கரமங்களை நிறைவேற்றுவதற்காக கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிலையத்தின முகாமையாளர் / பணிப்பாளர் என அழைக்கப்படும் ஒரு நிர்வாக செயலாளர் மற்றும் அவ்வப்போது தேவை என கருதி மாநகர சபையால் தீர்மானிக்கப்படும் வேறு யாராவது அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்படலாம். குறித்த பதவிக்கு முகாமையாளருக்கு உரிய விஷேட கல்வி தகைமைகள் மற்றும் விஷேட நிபுணத்துவம் உள்ள அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்.

**iii. கழிவு முகாமைத்துவம் தொடர்பான தொழில் பயிற்சி நிலையத்தின் பணிப்பொறுப்பு.**

i. கழிவுகளை வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்யும் இடங்களை இயக்குதல், பதப்படுத்துதல், தயார் செய்தல் செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான முறைமைப்படுத்தல், மேற்பார்வை, பரிசோதனை மற்றும் கட்டுப்படுத்துவதற்கான புதிய முறைமைகளை ஆய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

ii. உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அடிப்படையிலான திட்டங்களை சமர்ப்பித்தல், கழிவு முகாமைத்துவம் தொடர்பான கணக்கெடுப்பு, கழிவு கணக்காய்வு மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஏனைய சேவைகளை வழங்குதல்.

iii. கழிவுகளை வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்யும் இடங்களை இயக்குதல், பதப்படுத்துதல் மற்றும் அகற்றுதல் தொடர்பான முறைமைப்படுத்தல், மேற்பார்வை, பரிசோதனை மற்றும் கட்டுப்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்ப முறைமை தொடர்பான பாடநெறியை கூட்டிணைத்து நடத்துதல்.

iv. இலங்கை மூன்றாம்நிலை கல்வி ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து கழிவுகளை வேறாக பிரித்தல், களஞ்சியப்படுத்துதல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்யும் இடங்களை இயக்குதல், பதப்படுத்துதல், தயார் செய்தல் செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான முறைமைப்படுத்தல், மேற்பார்வை, பரிசோதனை மற்றும் கட்டுப்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்ப முறைமை தொடர்பான பாடநெறிக்கு அரச துறையின் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையை சேர்ந்த ஆர்வமுள்ள நபர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பாடநெறியை நடத்துதல், தடைதாண்டல் பரீட்சையின் பின்னர் குறித்த நபர்களுக்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழ் (NVQ) வழங்குதல்.

v. காலி மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் இளைஞர்கள் / யுவதிகள், பெண்கள், சமூக அமைப்புகள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், ஹோட்டல்கள், சுற்றுலா ஹோட்டல்கள், சிறைச்சாலைகள், இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்கள் மற்றும் பொலீஸ் முகாம்கள், மீனவ சங்கங்கள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களை இலக்காக கொண்டு சமகால கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடத்துதல்.

vi. கழிவு முகாமைத்துவம் செய்தல் மற்றும் உரிய வகையில் கழிவுகளை முகாமைத்துவம் செய்யாத இடங்கள் தொடர்பான மேற்பார்வைக்காக சமூக மட்டத்தின் அடிப்படையிலான பாதுகாப்பு வலையமைப்பை நிறுவதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

vii. காலி மாநகர சபைக்குரியதாக கழிவு முகாமைத்துவம் தொடர்பான பகுப்பாய்வு, கழிவு கணக்காய்வு மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் கழிவு முகாமைத்துவத்துக்கு உரிய செலவு பகுப்பாய்வை மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளுதல்.

viii. காலி மாநகர சபை எல்லைக்குள் உள்ள அனைத்து நிறுவனங்களாலும் வழங்கப்படும் கழிவு முகாமைத்துவ திட்ட தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மாதாந்த அறிக்கையை தயாரித்து காலி மாநகர சபைக்கு சமர்ப்பித்தல்.

## வீதிகள் மற்றும் பொது இடங்கள்

26.

i. காலி மாநகர சபை ஆணையாளர் நகர சபைத் தலைவருடன் கலந்துரையாடி சபையின் அங்கீகாரத்துக்கு அமைய கீழே காட்டப்படும் கருமங்களை திட்டமிட, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(அ) காலி மாநகர சபை பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், பாதைகள், பொது கான்கள், நீர்ப் பாதைகள் மற்றும் பொது சந்தைகளை தூய்மை மற்றும் சுகாதாரமான நிலையில் இயக்குதல்.

(ஆ) காலி மாநகர சபையால் வதிவிட பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொது கழிவு தொட்டிகள் அல்லது கொள்கலன்களை சுகாதாரமான நிலையில் பேணுதல் மற்றும் அவற்றுக்கு அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு அவை பாதிப்பு ஏற்படுத்த முன்னர் குறித்த தொட்டிகள் மற்றும் கொள்கலன்களில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுதல்.

(இ) முன்னைய பிரிவுகளில் விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக கிடைத்த ஏதாவது முறைப்பாட்டை விசாரணை செய்தல் மற்றும் அது தொடர்பாக தாமதமின்றி செயற்படுதல்.

ii. காலி மாநகர சபையால் விஷேடமாக கழிவுகளுக்காக வழங்கப்படும் ஏதாவது தொட்டியில் ஈரலிப்பான, வணிக நிறுவன, கைத்தொழில் கழிவுகள் அல்லது வேறு கழிவுகளை எந்தவொரு நபரும் வைக்கலாகாது.

**மாநகர சபையின் பொறுப்பு**

27.

i. காலி மாநகர சபை ஆணையாளர் நகர சபைத் தலைவருடன் கலந்துரையாடி சபையின் அங்கீகாரத்துக்கு அமைய கீழே காட்டப்படும் கருமங்களை திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(அ) கழிவுகளைக் குறைக்க, மீள பாவிக்க மற்றும் மீள் சுழற்சி செய்ய மக்களை வலுவூட்டுதல்.

(ஆ) கழிவுகளை தெரிவுசெய்து வேறாக பிரித்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், விடுவித்தல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல் அல்லது ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்தல்.

(இ) மீள்பாவனை மற்றும் மீள் சுழற்சி செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிகள் வழங்குதல்.

(ஈ) கழிவுகளை குறைத்தல், பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.

(உ) கழிவுகளை விடுவிக்கும் முறை தொடர்பாக மாற்று மாதிரிகளை ஒழுங்குபடுத்துதல்

(ஊ) காலி மாநகர சபை பிரதேசத்தின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு கழிவு வகைகளுக்கும் நகர சபையால் தீர்மானிக்கப்டும் வகையில் கழிவு சேகரிக்கப்படும் நாட்கள், நேரம், முறைகள் மற்றும் கட்டணத்தை குறிப்பிட்டு கழிவு சேகரிக்கும் கரும குறிப்புகளை தயாரித்தல் மற்றும் பொது விடுமுறை நாட்களில் கழிவு சேகரித்தலுக்கான நிபந்தனைகள் குறித்த கரும குறிப்புகளில் உள்ளடக்குதல்.

(எ) காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளர்களுக்கு தனியாக ஒப்படைக்கப்படாத வேறு பிரிக்கப்பட்ட கழிவுகளை கரும குறிப்புக்கு அமைய உரிய நேரத்தில் சேகரித்தல்.

(ஏ) காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட கழிவு சேகரிப்பாளர்களுக்கு தனியாக ஒப்படைக்கப்படாத அபாயகரமான கழிவுகள் மற்றும் வேறு ஏதாவது கழிவுகளை சுகாதாரமான முறையில் கொண்டு செல்லுதல்.

(ஒ) அபாயகரமான கழிவுகள் அல்லது ஆணையாளரால் விதிக்கப்படும் வேறு ஏதாவது கழிவு வகைகள் தவிர வீதியை கூட்டி, கான்களை துப்பரவு செய்த பின்னர் மற்றும் பொது இடங்களை துப்பரவு செய்த பின்னர் சேகரிக்கப்படும் கழிவுகளை பொது தொட்டிகளில் சேகரிக்கும் கழிவுகள் மற்றும் காலி மாநகர சபையின் அதிகாரம் பெற்ற கழிவு சேகரிப்பாளர்களிடம் ஒப்படைத்தல்.

(ஓ) காலி மாநகர சபை பிரதேசத்தில் உணவு மற்றும் ஏனைய உயிரியல் ரீதியில் உக்கக்கூடிய, மீள பாவிக்கக்கூடிய கழிவுகளை பிரயோக ரீதியில் இயன்றளவு முழுமையாக அல்லது பகுதியளவில் பதப்படுத்துவதற்கும், தயார் செய்தல் செய்வதற்குமான வேலைத்திட்டமும் அடங்கலாக காலி மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட மாநகர கழிவு சேகரிப்பாளரால் சேகரிக்கப்படும், பிரிக்கப்பட்ட கழிவுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த செயன்முறையிலிருந்து நிராகரிக்கப்படும் மற்றும் இக் கழிவு வகைகளின் எச்சங்களான கழிவுகள் காலி மாநகர சபையின் ஆணையாளர் அங்கீகரிக்கும் முறையில் அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

(ஔ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி காலி மாநகர சபையின் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் முறையில் அனைத்து அபாயகரமான கழிவுகளையும் அகற்றுதல்.

(ஃ) 1980 ஆண்டின் 47 இலக்க தேசிய சுற்றாடல் கட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிமம் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை பெறுதல் மற்றும் குறித்த உரிமத்தின் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய கழிவுகளை பதப்படுத்துதல் அல்லது எரித்தல் அல்லது சுகாதார முறையிலான புதைத்தலை இயக்குதல்.

(க) கழிவுகளை கூட்டுதல், ஒன்றுசேர்த்தல், தெரிவுசெய்து வேறுபிரித்தல், கொண்டு செல்லுதல், மாற்றுதல் மற்றும் அகற்றுதல் ஆகிய கருமங்களில் ஈடுபடும் அனைத்து

ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார முறைகளுக்கு ஏற்ப பொருத்தமான உடைகள், கையுறைகள், முகக்கவசம் மற்றும் பூட் சப்பாத்து மற்றும் ஏனைய கருவிகளை வழங்குதல்.

(கா) வீடு அல்லது வேறு வளாகத்தின் கட்டுமானம் அல்லது புனரமைப்புக்காக சபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது கட்டுமானத்தால் உருவாகின்ற திண்மக் கழிவுகளை அகற்றும் முறை மற்றும் குறித்த வேலை ஆரம்பமாகும் கட்டம் மற்றும் நிறைவடையும் போது கருங்கல் களஞ்சியப்படுத்தப்படும், தயாரிக்கப்படும் மற்றும் அகற்றப்படும் முறை தொடர்பான விபரங்களை பரிசீலித்தல் மற்றும் அங்கீகரித்தல்.

(கி) காலி மாநகர சபை வளாகத்துக்காக உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தல்.

(கீ) திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய மூலோபாயம் மற்றும் தொடர்புடைய சட்டத்துக்கு ஏற்ற வகையில் ஆகக்குறைந்தது ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டையும் உள்ளடக்கும் மற்றும் இறுதி அகற்றல் தொடர்பில் 03 ஆண்டுகள் எதிர்காலத்தில் உள்ளடக்கும் திண்ம கழிவு முகாமைத்துவ செயற்பாட்டு திட்டத்தை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல், குறித்த திட்டம் அதனை உள்ளடக்கும் காலப்பகுதிக்கு அமைய தொடர்ச்சியான அடிப்படையில் சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும்.

(கு) (அ) தொடக்கம் (கீ) வரையான விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கும் ஏதாவது முறைப்பாடுகள், அது தொடர்பில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் இருந்தால் மூன்று நாட்களுக்குள்ளும் வேறேதேனும் முறைப்பாடுகள் எனின் பதின்னான்கு நாட்களுக்குள் விசாரணை செய்தல் மற்றும் உடனடியாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(கூ) காலி மாநகர சபை கழிவு முகாமைத்துவ நிலத்தின் சுகாதாரத்துக்காக பொருத்தமான தொழில்நுட்ப முறையை பாவித்து திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதனை தொடர்ச்சியாக பேணுதல்.

(கெ) காலி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ அலகின் வாகனங்களின் சீரான இயங்குதிறனை, பாதுகாப்பை பேணுதல் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக செயற்படுபவர்களுக்காக காப்புறுதி வழங்குதல்.

(கே) காலி மாநகர சபை எல்லைக்குள் கழிவுகள் சார்ந்த மீள் சுழற்சி செயன்முறை ஊடாக புதிய உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்.

## அனுமதிப் பத்திரம்

28.

6. (i) காலி மாநகர சபை பிரதேசத்தில் கழிவுகளை மீள் பாவனைக்கு எடுக்கப்படும் மற்றும் மீள் சுழற்சிக்கு எடுக்கப்படும் அல்லது கொம்போஸ்ற், உயிரியல் வாயு அல்லது வேறு உற்பத்தியை உருவாக்கும் யாராவது நபர் கீழே காட்டப்படும் விடயங்களின் பொருத்தப்பாட்டுக்கு அமைய ஒன்று அல்லது சிலவற்றை நிறைவு செய்தால் அவருக்கு சபையால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

(அ) காலி மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட உப விதிக்கு அமைய மாநகர பிரதேசத்துக்குள் அல்லது வேறு உள்ளூராட்சி பிரதேசம் அல்லது ஏதாவது வியாபாரத்தை மேற்கொள்ளுதல்.

(ஆ) 1980 ஆண்டின் 47 இலக்க தேசிய சுற்றாடல் கட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வைத்திருத்தல்.

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுகளுக்காக சபையால் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களுக்கு ஏற்ப கட்டமைக்கப்படும் கழிவு சேகரிப்பு நிலையத்தை கொண்டிருத்தல்.

(ஈ) சேகரிக்கப்பட்ட கழிவுகள் காலி மாநகர சபையின் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் வகையிலும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத சுகாதாரமான முறையில் கொண்டு செல்வதற்கான வாகனங்களை கொண்டிருத்தல்.

(உ) குறித்த வியாபாரம் மாநகர சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்டால் காலி மாநகர சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையில் மேலே சொல்லப்பட்ட கழிவுகளை சேகரிப்பதற்கான கட்டணத்தை ஆணையாளருக்கு செலுத்துவதன் அடிப்படையில் கழிவுகளை பதப்படுத்துதல் அல்லது தயார் செய்தல் செய்யும் போது எஞ்சியிருக்கும் அல்லது நிராகரிக்கப்படும் அல்லது உப உற்பத்தியாக உருவாக்கப்படும் கழிவுகள் காலி மாநகர சபையால் அங்கீகரிக்கப்படும் வகையில் காலி மாநகர சபைக்கு ஒப்படைக்க உடன்படுதல்.

(ii) காலி மாநகர சபையால் உரிமம் வழங்குதல் நிராகரிக்கப்படும் போது அல்லது தள்ளுபடி செய்யப்படும் போது விண்ணப்பதாரி கோரினால் அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கான காரணத்தை உரிமத்துக்காக விண்ணப்ப படிவம் கிடைத்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட வேண்டும்.

(iii) காலி மாநகர சபையின் ஆணையாளரால் செல்லுபடியாகும் காலப்பகுதியினுள் சேகரிப்பதற்கு உரிமம் வழங்கப்படும் கழிவு வகை அல்லது வகைகள் மேலே சொல்லப்பட்ட கழிவுகளை சேகரிப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரதேசம் மற்றும் வேறு பொருத்தமான நிபந்தனைகள் அனுமதிப் பத்திரத்தில் காட்டப்பட வேண்டும்.

(iv) இவ் உப விதியின் (i) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் செயற்படாத சந்தர்ப்பத்தில் இவ் உப விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும்.

(v) (iv) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் யாராவது நபர் கழிவு சேகரித்தல் அல்லது பெற்றுக் கொள்ளலாகாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என மக்களை தெளிவூட்டுவதற்காக ஆணையாளர் ஊடகங்கள் மூலம் போதுமானளவு பிரச்சாரத்தை வழங்க வேண்டும்.

## கழிவு அகற்றும் பிரதேசம்

29. சபையால் கழிவு அகற்றும் கருமத்துக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசத்துக்குள் அனுமதி பெறாத நபர்கள் நுழையக் கூடாது மற்றும் அங்கே நடமாடலாகாது என்பதுடன், குறித்த பிரதேசத்தில் ஏதாவது பொருள், திரவியம் அல்லது அகற்றப்படும் எதனையும் வைத்தல், இடையூறு செய்தல் அல்லது அகற்றுதலாகாது. ஏந்த நபரும் விஷேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சபையால் அனுமதி வழங்கப்பட்டால் அன்றி சபையால் அவ்வப்போது விதிக்ப்படக்கூடிய ஏதாவது தடை செய்யப்பட்ட கழிவுகளை வைத்தலாகாது.

30. காலி மாநகர சபையின் சொத்தான கழிவுகளை அகற்றும் நிலத்தை முறையாக பேணி, குறித்த நிலத்தை வள மீளமைப்பு நிலையமாக மேம்படுத்துதல் காலி மாநகர சபையின் பொறுப்பாகும்.

31. காலி மாநகர சபையின் சொத்தான கழிவுகளை அகற்றும் நிலத்தை முறையாக பேணி, குறித்த நிலத்தை வள சுகாதாரமாக பேணுதல் காலி மாநகர சபையின் பொறுப்பாகும்.

32. அங்கீகரிப்பதற்கான ஏதாவது நிபந்தனைகளுக்கு அமைய மாநகர ஆணையாளர் மற்றும் மதிதிய சுற்றாடல் அதிகார சபையின் எழுத்துமூல முன் அங்கீகாரத்துடன் எந்தவொரு நபரும் நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவது காணி அல்லது வசதியை அதற்கு வெளியே உள்ள இடத்தில் உருவாகும் கழிவுகளை வைப்பதற்காக பாவித்தலாகாது.

## ஏனையவை

33.

(i) காலி மாநகர சபையின் மாநகர சபைத் தலைவர் அல்லது மாநகர ஆணையாளரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபர் அனைத்து நியாயமான நேரங்களிலும் ஏதாவது வளாகத்தினுள் நுழைதல் மற்றும் அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இவ் உப விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுகிறதா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதற்கான அதிகாரம் உள்ளது.

(ii) குறித்த வளாகத்தின் உரிமையாளர், குடியிருப்பாளர், பொறுப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கே வசிக்கும் ஒரு நபர் ஆணையாளர் அல்லது ஒரு அதிகாரம் பெற்ற அலுவலருக்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(iii) இவ் உப விதியின் கீழ் ஆணையாளர் அல்லது ஒரு அதிகாரம் பெற்ற அலுவலர் தனது அதிகாரத்தை பாவிப்பதற்கு எந்தவொரு நபரும் இடையூறு செய்யலாகாது.

34. காலி மாநகர சபையால் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைய, இவ் உப விதிகளை அமுல்படுத்தும் ஒரு அதிகாரம் பெற்ற அலுவலருக்கு ஊக்குவிப்பு வழங்கப்படலாம்.

35. இவ் உப விதிகளின் ஏதாவது ஏற்பாட்டை மீறும் நபர் மாநகர சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவான தவறுக்கு தவறிழைத்தவர் ஆவார்.

## பொருள்கோடல்

36. இவ் உப விதியின் கருமங்களுக்கான பதங்களின் தொடர்புக்கு அமைய வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டால் அன்றி,

‘‘**கழிவுப்பொருள்**’’ என்பதில் கட்டுமானத்தின் போது கட்டிடப் பொருட்களின் பாவனையால் உருவாகும் மண், சேறு, புழுதி, கழிவுப்பொருட்கள் மற்றும் ஏதாவது கட்டுமானத்தை உடைக்கும் போது உருவாகும் கழிவுப்பொருட்களும் அடங்கும்.

‘‘**கழிவுப்பொருள் அல்லது திண்மக் கழிவு**’’ என்பதில் அவற்றை அகற்றும் நபருக்கு பயன்பாட்டு பெறுமானம் அற்ற பொருட்கள் என கருதப்படுவதுடன், துகள் குப்பைகள், வீதிகளை தூய்மைப்படுத்தும் போது சேரும் கழிவுப்பொருட்கள், புழுதி, மண், சேறு மற்றும் சாம்பலும் கருதப்படும்.

‘‘**கட்டுமானக் கழிவு**’’ என்பதில் கட்டுமானத்தின் போது கட்டிடப் பொருட்களின் பயன்பாட்டினால் உருவாகும் மண், சேறு, புழுதி மற்றும் ஏதாவது கட்டுமானத்தை உடைப்பதனால் உருவாகும் கழிவுகளும் அடங்கும்.

**“உணவுக் கழிவுகள்”** என்பதில் மனித நுகர்வுக்காக பாவிக்கமுடியாத இறைச்சி, மீன், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிகள், பழங்கள் மற்றும் வேறு உணவுப் பொருட்களும் கருதப்படும்.

**“மருத்துவமனை”** என்பதில் ஏதாவது நோய் அல்லது பலவீனத்தால் உழலும் நபரை மகிழ்ச்சியுடன் வரவேற்றல், அவர்களை உபசரித்தல் மற்றும் தயார் செய்தல் வழங்குவதற்காக பாவிக்கப்படும் அல்லது பாவிக்கப்பட எதிர்பார்க்கப்படும் ஒரு வளாகமாகும் (எந்த வகையில் விபரிக்கப்பட்ட போதிலும்) என்பதுடன், பராமரிப்பு விடுதி, சாய்சாலை (கிளினிக்), மருத்துவ நிலையம், மகப்பேற்று விடுதி மற்றும் கால்நடை மருத்துவமனை / கால்நடை கிளினிக் ஆகியவையும் கருதப்படும்.

**“அபாயகரமான கழிவுப்பொருள்”** என்பதில் மருத்துவ கழிவுபொருட்கள், உடல் பாகங்கள், சதைகள், தொற்றக்கூடிய மற்றும் கடுமையாக தொற்றக்கூடிய கழிவுப்பொருட்கள், அகற்றப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் ஊசிகள் என கருதப்படும்.

**“அபாயகரமான கழிவுப்பொருள்”** என்பதில் பொது சுகாதாரம் அல்லது சுற்றாடலுக்கு ஊறு விளைவிக்கும் நஞ்சுள்ள, தீப்பற்றக்கூடிய, இடைத்தாக்கம் அடையக்கூடிய, நோய்க் காரணி, கதிரியக்க தன்மையுள்ள கழிவுகளும் அடங்கும்.

‘‘மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலையங்கள்’’ என்பதில் மரக்கறி மற்றும் பழங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள இடங்கள்.

**“அலுவலகம்”** என்பதில் 1954 ஆண்டின் 19 இலக்க கடைகள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றுவோர் தொடர்பான சட்டத்தில் (12 ஆவது அதிகாரம்) உள்ள அர்த்தம் இதற்கும் உள்ளது.

**“தொழிற்சாலை”** என்பதில் 1942 ஆண்டின் 45 இலக்க தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தில் உள்ள அர்த்தம் மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் காலி மாநகர சபையால் தொழிற்சாலை வரி அறவிடப்படும் அனைத்து வியாபாரங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கருதப்படும்.

**“அகழ்வு, கட்டுமானம் மற்றும் தகர்த்தல் ஆகிய செயலில் ஈடுபடும் நபர்”** என்பதில் தொழில் வழங்குனரால் குறித்த சேவைக்காக ஈடுபடுத்தப்படும் ஒரு நபரும் கருதப்படுவார்.

**“நடமாடும் வியாபாரிகள்”** என்பதில் தமது பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்காக ஒரு இடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்கு சென்று அல்லது பெயரிடப்பட்ட பிரதேசத்தில் விற்பனை செயற்பாடுகளில் ஈடுபடும் வீதி வியாபாரிகள் என கருதப்படும்.

**“நடைபாதை வியாபாரிகள்”** என்பதில் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுபவர் ஆவார். வீதி, ஒழுங்கை, நடைபாதை, ஒற்றையடிப்பாதை, பொது பூங்காக்கள், கடற்கரை, கங்கைக் கரைகள், உடற்பயிற்சிக்காக நடக்கும் ஒழுங்கைகள் மற்றும் வேறு வகையில் பொது

தேவை அல்லது தனியார் பிரதேசத்தில் அன்றாட பாவனைக்கு தேவையான பொருட்கள், ஆடை அணிகலன்கள், உணவுப் பொருட்கள் அல்லது வர்த்தக பொருட்கள் அல்லது பொது மக்களுக்கு சேவை வழங்குதல் ஆகியவை அடங்கும் என்பதுடன், அது தற்காலிகமாக கட்டப்பட்ட கட்டமைப்பில் அல்லது ஆங்காங்கே சென்று மற்றும் மேற்கொள்ளலாம் என்பதுடன், நடைபாதை வியாபாரிகள், வீதி வியாபாரிகள் என்பதில் பிரதேச ரீதியில் மற்றும் பிராந்திய ரீதியில் விஷேடமாக வரக்கூடிய அனைத்து சமமான பதங்களும் உள்ளடங்கும் வகையிலான இலக்கண தளம்பல்கள் மற்றும் உச்சரிப்பு கூற்றுக்கள் அனைத்தும் வீதி நடைபாதை வியாபாரிகள் எனும் சொல்லுக்கு உரியதாக கருதப்படும்.

**“குடியிருப்பாளர்”** என்பதில் ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது வியாபாரம் அல்லது அலுவலகத்தின் பொறுப்பாளர் என கருதப்படும்.

**“பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள்”** என்பதில் ஏதாவது முறையில் மாணவர்களுக்கு கல்வி வழங்கும் அரச அல்லது தனியார் பாடசாலைகள். பிரத்தியோக வகுப்புகள், முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள், முன்பள்ளிகள், பிரிவெனாக்கள், செமினரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழிற்கல்வி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்கள் என கருதப்படும்.

**“மீள பாவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்”** என்பதில் கழுவுவதன் மூலம் நச்சுக்கிருமிகள் இறப்பதனால் அல்லது வேறு முறைகளில் சுத்தம் செய்த பின்னர் பாவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் என கருதப்படும்.

**“கொண்டு செல்லுதல்”** என்பதில் மனிதர்கள், விலங்குகள் அல்லது இயந்திர சக்தியால் இயங்கும் வகையிலான ஊடகத்தைப் பாவித்து கழிவுப்பொருட்களைச் சேரிக்கும் இடத்திலிருந்து அவற்றைப் பதப்படுத்துதல், தயார் செய்தல் செய்தல் அல்லது அகற்றுவதற்கான இடத்துக்கு கொண்டு செல்லுதல் என கருதப்படும்.

**“தொட்டி / பாத்திரம் அல்லது வேறு கொள்கலன்”** என்பதில் உப விதியில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்துதல், விடுவித்தல், சேகரித்தல் அல்லது கொண்டு செல்வதற்காக பாவிக்கப்படும் ஏதாவது தொட்டி, பாத்திரம், உறை, பை அல்லது வேறு கொள்கலன் என கருதப்படும்.

**“அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர்”** என்பதில் கழிவுப்பொருட்களை சேகரிக்க அல்லது பெறுவதற்கு ஆணையாளரிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறும் நபர் என கருதப்படுகிறது.

**“அதிகாரம் பெற்ற அலுவலர்”** என்பதில் இவ் உப விதியின் கீழான கடமைகளை நிறைவேற்றுவதற்காக அல்லது மேற்கொள்வதற்காக மாநகர சபைத் தலைவரால் அல்லது ஆணையாளரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்படும் நபர் என கருதப்படும்.

**“அகற்றுதல்”** என்பதில் பாதிப்பு ஏற்படுத்தாததும், மீள் சுழற்சி செய்யப்படாததும், பதப்படுத்தப்படாததும், தயார் செய்தல் செய்யப்படாததுமான அனைத்து

கழிவுப்பொருட்களையும் நிரந்தரமாக வைத்திருக்க கருதப்படும் காணியின் மேற்புறம் அல்லது உள்ளே வைப்பு செய்வது என கருதப்படும்.

**"நாளாந்தம் வருகைதரும் மக்கள்"** என்பதில் காலி மாநகர சபை எல்லைக்குள் நாளாந்தம் பல்வேறு சேவைகள், கருமங்கள் மற்றும் சுற்றுலாவுக்காக வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்கள் என கருதப்படும்.

**"இறைச்சி, மீன், கோழி இறைச்சி அல்லது முட்டை விற்பனை நிலையம்"** என்பதில் இப் பொருட்களை விற்பனை செய்யும் கருமத்துக்காக களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அல்லது விற்பனை செய்வதற்காக வைத்துள்ள அல்லது காட்சிப்படுத்தியுள்ள இடம் என கருதப்படும்.

**"மாற்றம் செய்யும் இடம்"** என்பதில் குறித்த இடத்திலிருந்து ஏதாவது மீள் சுழற்சி, பதப்படுத்தும், தயார் செய்தல் செய்யும் அல்லது அகற்றும் வசதியுள்ள இடத்துக்கு கழிவுப்பொருட்களை கொண்டுசெல்லும் வினைத்திறனை மேம்படுத்தும் கருமத்துக்காக கழிவுப்பொருட்களை மிகவும் சிறிய அளவான வாகனங்களிலிருந்து மிகவும் பெரிய அளவான வாகனங்களுக்கு மாற்றுதல் இடம்பெறும் கருமத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் என கருதப்படும்.

**"நபர்"** என்பதில் கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத கம்பனி அல்லது நபர்களின் சங்கம் அல்லது குழுமம் என கருதப்படும்.

**"மாநகர பழிவுப்பொருள் சேகரிப்பவர்"** என்பதில் தொட்டிகள் அல்லது கொள்கலன்களிலிருந்து கழிவுப்பொருட்களை கூட்டுதல், சேகரித்தல், பெறுதல் அல்லது அகற்றுவதற்காக சபையால் பாவிக்கப்படும் ஊழியர் அல்லது குறித்த கருமத்தை நிறைவேற்றுவதற்கு சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ள நபர் என கருதப்படுவார்.

**"வேறு பிரித்தல்"** என்பதில் இவ் உப விதியில் பாவிக்கப்பட்டுள்ள வகைகளுக்கு ஏற்ற வகையில் கழிவுப்பொருட்களை நானாவித வகைகளாக வேறு பிரித்தல் என கருதப்படும்.

**"பதப்படுத்தல்"** என்பதில் கழிவுப்பொருட்களை பயனுள்ள உற்பத்தியாக மாற்றும் செயன்முறை கருதப்படுகிறது.

**"சபை"** என்பது காலி மாநகர சபை என கருதப்படும்.

**"கடை"** என்பதில் தொகை அல்லது சில்லறை வர்த்தகத்துக்காக பொருட்கள் வைக்கப்பட்டுள்ள இடம் என்பதுடன் உணவு பானங்கள் விற்பனைக்கு வைத்துள்ள இடம் மற்றும் பாபர் கடை அல்லது அழகுக்கலை சலூன் ஒன்றை இயக்கப்படும் இடமும் அதில் அடங்கும்.

**"மாநகர பிரதேசம்"** என்பதில் மாநகர சபை கட்டளைச் சட்ட (252 அதிகாரம்) அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசம் என கருதப்படும்.

**“சுகாதார தரை நிரப்பல்”** என்பதில் அது சார்ந்த சமூக, சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கத்தைக் குறைப்பதற்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களுக்கு ஏற்ப கழிவுப்பொருட்களை இறுதியாக அகற்றுதல் என கருதப்படும்.

**“உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்”** என்பதில் வளாகத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளரால் அட்டோர்னி தத்துவம் வழங்கப்பட்டுள்ள நபர் அல்லது உரிமையாளரால் தனது கைத்தொழில், தொழிற்சாலை, தோட்ட முகாமைத்துவத்துக்கு நியமிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது பொறுப்பாளர் அல்லது வாடகைக்கு பெற்றவர், குத்தகையாளர் அல்லது உப குத்தகையாளர் அடங்குவதுடன் வேறு நபர்களின் உத்தரவின் கீழ் செயற்படும் முகாமையாளர் என கருதப்படும்.

## அட்டவணை 1

காலி மாநகர சபையால் விதந்துரை செய்யப்படும் திண்ம கழிவு சேகரிக்கும் முறைமைகள் இவ் அட்டவணையில் அடங்க வேண்டும்.

## அட்டவணை 2

காலி மாநகர சபை எல்லைக்குள் காலி மாநகர சபையால் கழிவுப்பொருள் அகற்றுதல் தடை செய்யப்பட்டுள்ள பிரதேசம் இவ் அட்டவணையில் காட்டப்பட வேண்டும். (உதா – அதாவது இவ் ஆவணத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காலி கோட்டை போன்ற நிச்சயிக்கப்பட்ட பிரதேசம்)

## அட்டவணை 3

அகற்றுவதற்காக உள்ள கழிவுப்பொருட்களின் தன்மையை கருத்திலெடுத்து சபையால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வகையில் காலி மாநகர சபையால் விதிக்கப்படும் கழிவுப்பொருட்களை அற்றுவதற்காக நகர சபையிடம் அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள மாநகர கழிவுப்பொருட்களை சேகரிப்பவருக்கு செலுத்த வேண்டிய கட்டணம் இதில் உள்ளடங்க வேண்டும்.

## அட்டவணை 4

வீட்டு கழிவு வகுதியில் அடங்காத வீட்டு வளாகத்தில் உருவாகும் கழிவு வகைகள் இவ் அட்டவணையில் அடங்க வேண்டும்.

## அட்டவணை 5

காலி மாநகர சபையால் வீட்டு வளாகங்களிலிருந்து உருவாகும் வீட்டு கழிவுகளுக்காக தொழில்நுட்ப அடிப்படையில் விதிக்கப்படும் நிச்சயிக்கப்பட்ட நிறைக்கு உரியதாக அறவிடப்படும் பணத்தொகை இதில் அடங்க வேண்டும்.

## அட்டவணை 6

அபாயகரமான கழிவுப்பொருட்கள் எவை என்பது தொடர்பாக தனித்தனியாக இதில் காட்டப்பட வேண்டும் என்பதுடன், அவற்றை பொறுப்பேற்பதற்காக அறவிடப்படும் கட்டணம் இதில் காட்டப்பட வேண்டும். (அதாவது இலத்திரனியல் மற்றும் மின்னியல் கழிவுகள் மற்றும் கழிவுப்பொருட்கள், சுகாதார கழிவுப்பொருட்கள், மருத்துவ கழிவுகள், அகற்றப்படும் மருந்துகள் போன்ற பதார்த்தங்கள், கிருமிநாசினிகள் அடங்கியிருந்த போத்தல்கள் போன்றவை)

## காலி மாநகர சபை 7

உணவு கழிவுப்பொருட்கள் மற்றும் வேறு உயிரியல் ரிதியில் கழிவுப்பொருட்கள் எவை என்பது தொடர்பாக தனித்தனியாக இதில் குறிப்பிடப்பட வேண்டும்.

## அட்டவணை 8

கேஸ், மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது வேறு பொது வசதிகளை வழங்குவதற்காக ஏதாவது வீதி, பாதை அல்லது பொது இடத்தில் அகழ்வு செய்யும் யாராவது நபர் காலி மாநகர சபை ஆணையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெறுவதற்கான மாதிரி.

## அட்டவணை 9

காலி மாநகர சபை எல்லைக்குள் நடமாடும் / முறைசாரா கழிவு சேகரிப்பாளர்கள், கழிவு கொண்டுசெல்வோர், கழிவு சேகரிப்போர், கழிவுகளை மீள்சுழற்சி செய்வோருக்காக மாநகர சபையால் வருடாந்தம் வழங்கப்படும் உரிமம் வழங்குவதற்கான மாதிரியை காட்டும் அட்டவணை.

## அட்டவணை 10

காலி மாநகர சபை எல்லைக்குள் வியாபாரம் செய்யும் ஒரு நபர் அல்லது பொது மக்களின் பங்களிப்புடன் பொதுவான சமய, சமூக, கலாச்சார, பொழுதுபோக்குக்காக நடத்தப்படும் விழாக்கள் அல்லது கல்வி செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் மற்றும் அமுல்படுத்தும் ஒரு நபர் குறித்த செயற்பாட்டை மேற்கொள்ள முன்னர் மாநகர சபையின் அனுமதி பெறுவதற்கான மாதிரி.

## அட்டவணை 11

இலக்கம் 8 தொடக்கம் 19 வரையான உப விதிகளில் விஷேடமாக குறிப்பிடப்படாத காலி மாநகர சபை எல்லைக்குள் வியாபாரத்தை மேற்கொள்ளும் நபர் அல்லது பொது மக்களின் பங்களிப்புடன் பொதுவான சமய, சமூக, கலாச்சார, பொழுதுபோக்குக்காக நடத்தப்படும் விழாக்கள் அல்லது கல்வி செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் மற்றும் அமுல்படுத்தும் ஒரு நபர் குறித்த செயற்பாட்டை மேற்கொள்ள முன்னர் மாநகர சபையில் வைப்பு செய்யப்படும் இரண்டாவது பண வைப்பு தொடர்பான செயற்பாட்டினால் உருவாகும் என எதிர்பார்க்கும் மதிப்பீடு செய்யப்பட்ட கழிவுப்பொருட்களின் அளவுக்கு ஏற்ற வகையில் அறவிடப்படும் பணம் இம் மாதிரியில் காட்டப்பட வேண்டும். அத்துடன் கலப்பு கழிவுகளை பொறுப்பேற்கும் போது அறவிடப்படும் விலைகளும், பிரிக்கப்பட்ட பின்னர் ஒப்படைக்கப்படும் கழிவுகளுக்காக அறவிடப்படும் விலைகளும் தனித்தனியாக காட்டப்பட வேண்டும்.